සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

| සාමාන්‍ය පොදු පරීක්ෂණය<br>பொதுச் சாதாரணப் பரீட்சை<br>Common General Test | 12 T | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ கணிப்பான்கள் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இலங்கையின் அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் ஒன்று 2023 யூலை 01 ஆந் திகதி அதன் 80 ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. உலகின் இரண்டாவது பெரிய வாசிப்பு மண்டபம் இப்பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் உள்ளது. இப்பல்கலைக்கழகம் யாது?
(1) மொரட்டுவைப் பல்கலைக்கழகம் (2) கொழும்புப் பல்கலைக்கழகம்
(3) பேராதனைப் பல்கலைக்கழகம் (4) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(5) களனிப் பல்கலைக்கழகம்

**2.** 1972 மே 22 ஆந் திகதியிலிருந்து இலங்கையில் ஒரு புதிய அரசியலமைப்பை (இது இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு என அழைக்கப்பட்டது) நடைமுறைப்படுத்துவதற்கு இசைவாக அப்போது இருந்த இலங்கையின் மகாதேசாதிபதி இலங்கையின் முதலாவது சனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறு இலங்கையின் முதலாவது சனாதிபதியாக நியமிக்கப்பட்ட மதிப்பைப் பெற்றவர் யார்?
(1) சேர் டீ. பீ. ஜயத்திலக்க (2) சேர் ஒலிவர் குணத்திலக்க
(3) சேர் ஜோன் கொத்தலாவல (4) திரு. விலியம் கொபல்லவ
(5) திரு. ஏ. எப். மொலமுறே

**3.** இலங்கையின் காலனியாதிக்கக் காலத்தில் நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிய நாடுகள் பெறுமதிமிக்க வளங்களை இந்நாட்டிலிருந்து கொள்ளையடித்துச் சென்றன. இவ்வாறு கொள்ளையடித்துச் சென்ற பொன், வெள்ளி, வெங்கலம், மாணிக்கக்கல் ஆகியன பதிக்கப் பெற்றனவும் 275 ஆண்டுகளுக்கு முற்பட்டதுமான பீரங்கி உட்பட காலனியாதிக்கக் காலத்திற்கு முந்திய பெறுமதிமிக்க ஆறு பொருள்களின் உரிமையை இலங்கையிடம் மீண்டும் கையளிக்கும் உடன்படிக்கையில் அண்மையில் கையொப்பமிட்ட நாடு பின்வருவனவற்றில் யாது?
(1) ஸ்பெயின் (2) இந்தியா (3) நெதர்லாந்து
(4) போர்த்துக்கல் (5) ஐக்கிய இராச்சியம்

**4.** அண்மைய ஆண்டுகளில் குழந்தைப் பருவக் கொழுமை மும்மடங்காகியுள்ளதென இலங்கையில் நடைபெற்றுள்ள புதிய கற்கைகளிலிருந்து அறியக் கிடைக்கின்றது. சிறிய பிள்ளைகளிடையேயும் கட்டிளைஞர்களிடையேயும் இருக்கும் கொழுமையின் ஒரு விளைவாகப் பின்வரும் எது **அமைவதில்லை**?
(1) ஆஸ்துமா (2) உயர் இரத்த அழுத்தம்
(3) உயர் கொலெஸ்திரோல் (4) வகை 2 நீரிழிவு
(5) புற்றுநோய்

**5.** இலங்கை பின்வரும் எந்தத் தாபனத்தின் ஓர் அங்கத்துவ நாடன்று?
(1) ஆசியன் (ASEAN)
(2) பிம்ஸ்ரெக் (BIMSTEC)
(3) ஐக்கிய நாடுகள் தாபனம் (UNO)
(4) சார்க் (SAARC)
(5) பொதுநலவாய நாடுகள் (Commonwealth Countries)

AptitudeExam.com

**6.** 2023 ஒகஸ்ற் 29 ஆந் திகதி நடைபெற்ற ஓர் ஆய்வுச் சத்திரசிகிச்சையின்போது ஒரு பெண்ணின் மூளையிலிருந்து 8 cm நீளமுள்ள ஓர் உயிருள்ள ஒட்டுண்ணிப் புழு அகற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இச்சத்திரசிகிச்சையுடன் சம்பந்தப்பட்ட மருத்துவர்களில் ஒருவர் தொற்றுநோய் நிபுணராகிய டாக்டர் சஞ்சய சேனாநாயக்க ஆவார். இந்நிகழ்வு எங்கே நடைபெற்றது?

(1) லண்டன் (2) கொழும்பு (3) சிங்கப்பூர்
(4) புதுடில்லி (5) கன்பரா

**7.** இந்திய விண்வெளி ஆய்வு நிறுவகத்தின் மூலம் விருத்தி செய்யப்பட்ட (சந்திராயன் நிகழ்ச்சித் திட்டம் என அழைக்கப்படும்) சந்திர ஆய்வுத் தொடரில் 2023 யூலை 14 ஆந் திகதி புறப்பட்ட விண்வெளிக் கப்பல் 2023 ஒகஸ்ட் 23 ஆந் திகதி சந்திரனின் தென் துருவத்தின் மேற்பரப்பில் வெற்றிகரமாகத் தரையிறங்கிய அண்மைக்கால முயற்சியின் பெயர் யாது?

(1) சந்திராயன் - 1 (2) சந்திராயன் - 2 (3) சந்திராயன் - 3
(4) சந்திராயன் - 4 (5) சந்திராயன் - 5

**8.** 2023 ஒக்ரோபர் மாதத்தில் நடைபெற்ற 19 ஆவது ஆசியன் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை விளையாட்டு வீராங்கனையாகிய தருஷி தில்சரா கருணாரத்ன தங்கப் பதக்கத்தை வென்ற விளையாட்டு நிகழ்ச்சி

(1) 100 m (2) 200 m (3) 400 m (4) 800 m (5) 1500 m

**9.** காசாப் பிரதேசத்தில் சாதாரண மக்கள் பலர் இறப்பதற்கு ஏதுவான, 2023 ஒக்ரோபர் மாதம் இஸ்ரேலுக்கும் ஹமாஸிற்குமிடையேயான யுத்தம் ஆரம்பமாயிற்று. காசாப் பிரதேசம் பின்வரும் எந்நாட்டின் பொது எல்லையாக அமைந்துள்ளது?


(1) ஜோர்தான் (2) சிரியா (3) ஈரான் (4) லெபனான் (5) எகிப்து

**10.** மனித உரிமைகளுக்காகப் போராடும் நார்கீஸ் மொஹொம்மாடி (Narges Mohammadi) 2023 ஆம் ஆண்டுக்குரிய சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளார். அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(1) லிபியா (2) கியூபா (3) ஈராக் (4) ஈரான் (5) பாலஸ்தீனம்

- **11, 12** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு குறித்த நாட்டின் ஒரு மாநிலத்தில் ஆளும் கட்சியைத் தெரிந்தெடுப்பதற்கான தேர்தல் 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து அதன் பின்னர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெற்றது. ஒவ்வொரு தேர்தலிலும் $A, B, C$ என்னும் மூன்று கட்சிகள் போட்டியிட்டன. தேர்தலில் யாதாயினும் ஒரு கட்சி அளிக்கப்பட்ட வாக்குகளில் 50% இலும் கூடுதலான வாக்குகளைப் பெற்றால் அக்கட்சி தனியே ஓர் அரசாங்கத்தை அமைக்க முடியும் அதே வேளை அவ்வாறு இல்லாவிட்டால் அரசாங்கத்தை அமைப்பதற்கு இரண்டு கட்சிகள் இணையும். கடந்த ஐந்து தேர்தல்களில் ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கைகள் நிரல் வரைபில் (நூறு ஆயிரங்களில்) தரப்பட்டுள்ளன.




**11.** எந்த ஆண்டில் ஒரு கட்சி மற்றைய இரு கட்சிகளில் எதனுடனும் சேராமல் தனியே ஓர் அரசை அமைக்கத்தக்கதாக இருந்தது?

(1) 2000 (2) 2005 (3) 2010 (4) 2015 (5) 2020

**12.** கட்சி C இற்கு எவ்வாண்டில் கூடுதலான வாக்குச் சதவீதம் கிடைத்தது?

(1) 2000 (2) 2005 (3) 2010 (4) 2015 (5) 2020

**13.** ஒரு 100 m ஓட்ட நிகழ்ச்சியில் பிரபாத் ஓட்டப்பாதையில் தனது 90 ஆவது மீற்றரைக் கடந்து செல்லும் கணத்தில் முன்னால் இருந்தார். அக்கணத்தில் பிரபாத்திற்கு 1 m பின்னால் இருந்த குமார் இரண்டாவதாக இருந்தார். பிரபாத் 24 $km\ h^{-1}$ சீரான கதியைப் பேணியிருந்தால், போட்டியைப் பிரபாத்துடன் ஒரே நேரத்தில் முடிப்பதற்குக் குமார் அடுத்த 11 m இல் பேண வேண்டிய சீரான கதி யாதாக இருந்திருத்தல் வேண்டும்?

(1) 24.6 $km\ h^{-1}$ (2) 25.0 $km\ h^{-1}$ (3) 25.5 $km\ h^{-1}$ (4) 26.4 $km\ h^{-1}$ (5) 26.8 $km\ h^{-1}$

AptitudeExam.com

**14.** நீர் சேகரிக்கப்படும் ஒரு தொட்டிக்கு இரு திருகுபிடிகளின் மூலம் நீர் கிடைக்கின்றது. திருகுபிடி 1 தனியே தொட்டியில் நீரை நிரப்புவதற்கு ஒரு மணித்தியாலம் எடுக்கின்றது. திருகுபிடி 2 தனியே தொட்டியில் நீரை நிரப்புவதற்கு இரண்டு மணித்தியாலம் எடுக்கின்றது. இரு திருகுபிடிகளும் ஒரே நேரத்தில் திறக்கப்பட்டால், தொட்டியில் நீரை நிரப்புவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?
(1) 20 நிமிடங்கள் (2) 25 நிமிடங்கள் (3) 30 நிமிடங்கள்
(4) 40 நிமிடங்கள் (5) 80 நிமிடங்கள்

**15.** 2000 ஆம் ஆண்டில் அக்கிரமின் தந்தையின் வயது அக்கிரமின் வயதின் நான்கு மடங்காக இருந்தது. அக்கிரம் 1990 ஆம் ஆண்டில் பிறந்தால், எவ்வாண்டில் அக்கிரமின் தந்தையின் வயது அக்கிரமின் வயதின் இருமடங்ககாக இருந்தது?
(1) 2010 (2) 2013 (3) 2018 (4) 2020 (5) 2022

**16.** சித்திப் புள்ளி 40 ஆக இருந்த ஒரு பரீட்சைக்கு ஐந்து மாணவர்கள் தோற்றினர். அவர்கள் அனைவரும் சித்தியடைந்த அதே வேளை அவர்கள் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 205 ஆகும். இரு மாணவர்கள் கூடுதலான புள்ளிகளையும் இரு மாணவர்கள் குறைவான புள்ளிகளையும் பெற்றால், மற்றைய மாணவன் பெற்ற புள்ளி யாது?
(1) 40 (2) 41 (3) 42 (4) 43 (5) 44

**17.** திரு. பெரேரா வங்கி A இலிருந்து 18% ஆண்டு எளிய வட்டி வீதத்திற்கு ரூ. 50 000 ஐக் கடனாகப் பெற்றார். அதே வேளை அவர் வங்கி B இலிருந்து ரூ. 75 000 யும் கடனாகப் பெற்றார். ஓர் ஆண்டிற்குப் பின்னர் அவர் ஒவ்வொரு கடனிற்காகவும் ஒரே தொகையை வட்டியாகக் கொடுத்தார். வங்கி B இன் ஆண்டு எளிய வட்டி வீதம் யாது?
(1) 10% (2) 12% (3) 15% (4) 17% (5) 18%

**18.** திரு. கொஸ்தா தனது உயிலில் தனது சொத்துகளை மூன்று பிள்ளைகளிடையே பின்வருமாறு பிரித்தார்.

மூத்த மகன் : 17.5 மில்லியன் ரூபாய்ப் பெறுமானமுள்ள அவருடைய வியாபாரச் சொத்துகள்.
மகள் : 12.5 மில்லியன் ரூபாய்ப் பெறுமானமுள்ள அவருடைய தென்னந்தோட்டம்.
இளைய மகன் : 15 மில்லியன் ரூபாய்ப் பெறுமானமுள்ள அவருடைய வீடு.

அத்துடன், திரு. கொஸ்தா தனது வங்கிக் கணக்குகளில் உள்ள மொத்தப் பணமாகிய 50 மில்லியன் ரூபாயில் 50% ஐத் தனது மூத்த மகனுக்கும் மகளுக்கும் சம தொகைகளாகக் குறித்தொதுக்கி, மீதி 50% ஐ இளைய மகனுக்கு ஒதுக்கினார். திரு. கொஸ்தா தனது சொத்துகளை மூத்த மகன், மகள், இளைய மகன் ஆகியோருக்கிடையே முறையே குறித்தொதுக்கிய விகிதம் யாது?
(1) 2 : 3 : 4 (2) 3 : 2 : 5 (3) 3 : 4 : 6 (4) 5 : 6 : 7 (5) 6 : 5 : 8

**19.** ஒரு குறித்த பாடசாலையில் 900 மாணவர்கள் உள்ளனர். முதற்பிரிவு, இடைப்பிரிவு, மேற்பிரிவு ஆகியவற்றில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைகளின் விகிதம் 3 : 2 : 1 ஆகும். இடைப்பிரிவில் உள்ள மாணவர்களில் 20% ஆனோர் சங்கீதத்தை ஒரு பாடமாக எடுத்தால், இடைப்பிரிவில் சங்கீதத்தை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
(1) 45 (2) 50 (3) 55 (4) 60 (5) 65

**20.** ஒரு பக்கத்தின் நீளம் 100 cm ஆகவுள்ள ஒரு சதுரத்திலிருந்து 80 cm நீளமும் 75 cm அகலமும் உள்ள ஒரு செவ்வகம் வெட்டி நீக்கப்பட்டுள்ளது. தொடக்கச் சதுரத்தின் பரப்பளவு தொடர்பாகச் செவ்வகத்தின் பரப்பளவு சதவீதம் யாது?
(1) 40% (2) 50% (3) 60% (4) 70% (5) 80%

**21.** பாஷன் பழச் சாறையும் தூய மாம்பழச் சாறையும் கனவளவுப்படி 2 : 3 விகிதத்திற் கலந்து ஒரு பழச்சாறு தயாரிக்கப்படுகின்றது. இக்கலவை ஒரு பழப்பானத்தை ஆக்குமாறு நீருடன் விகிதம் 1 : 3 இற்கு ஐதாக்கப்படுகின்றது. இப்பழப் பானத்தின் ஒரு லீற்றரில் உள்ள பாஷன் பழச்சாறின் கனவளவு யாது?
(1) 50 ml (2) 100 ml (3) 150 ml (4) 200 ml (5) 250 ml

**22.** ஓர் ஐஸ்கிறீம் உற்பத்தித் தொழிற்சாலையில் ஐஸ்கிறீம் கூம்பில் ஒரு சீரான வீதத்தில் ஐஸ்கிறீம் இடப்படுகின்றது. கூம்பின் வட்ட அடியின் ஆரை அதன் உயரத்திற்குச் சமம். அரைச் செக்கனில் கூம்பில் அதன் உயரத்தின் அரைவாசிக்கு ஐஸ்கிறீம் இடப்படுமெனின், கூம்பின் முழு உயரத்திற்கும் ஐஸ்கிறீமை நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு செக்கன் எடுக்கும்?
(1) 2.5 (2) 3.5 (3) 4.0 (4) 5.0 (5) 5.5

AptitudeExam.com

● **23** தொடக்கம் **26** வரையுள்ள வினாக்கள் கிரபிலோனியா, சிரபிலோனியா என்ற இரு கற்பனை இராச்சியங்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு கையில் ஐந்து விரல்கள் உள்ளன என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்டு சிரபிலோனியர்கள் எண்ணுவதற்கு அடி 5 ஐயும் கிரபிலோனியர்கள் இன்று வரைக்கும் அறியப்படாத காரணங்களுக்காக அடி 3 ஐயும் பயன்படுத்தினர். எண்களை எழுதும்போது சிரபிலோனியர்கள் இரண்டு வரையுள்ள எண்களுக்காகக் கிரபிலோனியக் குறியீடுகளைப் பயன்படுத்திய அதே வேளை அதைவிட உயரிய எண்களை எழுதுவதற்குத் தமக்கே உரித்தான குறியீடுகளைக் கொண்டிருந்தனர்.

**23.** பின்வரும் எந்த எண் சிரபிலோனிய எண்குறிகளிலான ஒரு தனிக் குறியீட்டை மீண்டும் மீண்டும் இடுவதன் மூலம் வகைகுறிக்கப்படமாட்டாது?

(1) 6 (2) 17 (3) 24 (4) 31 (5) 62

**24.** 42 இன் சிரபிலோனிய வகைக்குறிப்பில் எத்தனை கிரபிலோனியனல்லாத குறியீடுகள் தோற்றுகின்றன?

(1) 0 (2) 1 (3) 2 (4) 3 (5) 4

**25.** கிரபிலோனியர்கள் 45 ஐ  என எழுதியிருந்தால், சிரபிலோனியர்கள் அதனைப் பின்வரும் எவ்விதத்தில் எழுதியிருப்பர்?

(1)  (2)  (3) 

(4)  (5) 

**26.** பின்வரும் கூற்றுகளை அவற்றின் நம்பகத்தன்மைக்கேற்பத் தரப்படுத்துக.

$S_1$ : பைதகரசுத் தொடர்பு கிரபிலோனிய முக்கோணிகளுக்கோ, சிரபிலோனிய முக்கோணிகளுக்கோ பொருந்துவதில்லை.

$S_2$ : பெரும்பாலான கிரபிலோனியச் சிறுவர்கள் எண்களைச் சிரபிலோனியச் சிறுவர்களிலும் பார்க்க விரைவாகக் கற்கின்றனர்.


$S_3$ : கிரபிலோனியப் பிள்ளைகள் பெருக்கல்களில் தமது சிரபிலோனியச் சகபாடிகளிலும் பார்க்கக் கூடுதலான நேரத்தைச் செலவிடுகின்றனர்.


(1) $S_1 < S_2 < S_3$ (2) $S_2 < S_1 < S_3$ (3) $S_3 < S_1 < S_2$ (4) $S_1 < S_3 < S_2$ (5) $S_2 < S_3 < S_1$


**27.** தரப்பட்ட உருவில் ஒரு சுவர்க் கடிகாரத்தின் முகத்தின் ஒரு தள ஆடியின் மீதான விம்பம் காட்டப்பட்டுள்ளது.


பின்வரும் எவ்வுருவில் சுவர்க் கடிகாரத்தின் முகத்தினதும் தள ஆடியினதும் சரியான அமைவுகள் காட்டப்பட்டுள்ளன?





(1)



(2)



(3)


(4)



(5)


**28.** வரிப்படத்தில் தரப்பட்டுள்ள கோலத்தைப் பயன்படுத்தி ஒரு சதுரமுகி செய்யப்படுமெனின், பின்வரும் எவ்வுரு சதுரமுகியின் ஒரு சரியான தோற்றத்தை வகைகுறிப்பதில்லை?




(1)


(2)


(3)


(4)


(5)

AptitudeExam.com

**29.** பின்வரும் எது ஓர் இருபரிமாண உலகில் வாழும் அந்நியனில் பெரும்பாலும் காணப்படமாட்டாது?
(1) ஒரு சமிபாட்டுத் தொகுதி (2) ஒரு சுவாசத் தொகுதி
(3) ஒரு குருதிச் சுற்றோட்டத் தொகுதி (4) ஒரு நரம்புத் தொகுதி
(5) ஒரு வன்கூட்டுத் தொகுதி

**30.** தரப்பட்டுள்ள கூற்றுகளை உறுதியானது (A), நிகழத்தக்கது (B), குறைந்தளவில் நிகழத்தக்கது (C), நிகழமுடியாதது (D) என வகைப்படுத்துக.
1. இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரே மாவட்டத்திலிருந்து இரு உறுப்பினர்கள் உள்ளனர்.
2. சில பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் BREXIT பற்றிய தமது கட்சியின் தீர்மானம் தொடர்பாக மகிழ்வுறவில்லை.
3. சில மைக்கிரொனீசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் காலை உணவாகச் சம்பலையும் தேங்காய் ரொட்டியையும் சாப்பிடுகின்றனர்.
4. எந்த இரு மலேசியப் பாராளுமன்ற உறுப்பினர்களும் வாரத்தின் ஒரே நாளில் பிறந்ததில்லை.

(1) A, B, C, D (2) B, C, A, D (3) B, D, A, C (4) C, B, A, D (5) D, C, B, A

**31.** பின்வரும் எந்தச் சோடியின் தரவிலிருந்து முடிபுக்கு வரமுடியாது?

| | தரவு | முடிபு |
|---|---|---|
| (1) | எல்லாப் பேராசிரியர்களும் வெண்பலகைக்கு மேலாகக் கரும்பலகையை விரும்புகின்றனர். | பேராசிரியர் சேனாரத்ன வெண்பலகைக்கு மேலாக கரும்பலகையை விரும்புகின்றார். |
| (2) | இரு நேர்கோடுகள் ஒரேயொரு புள்ளியில் இடைவெட்டுகின்றன. | அவை சமாந்தரமில்லை. |
| (3) | ஜிம்மியின் வால் ரெக்சியின் வாலிலும் குறுகியது. | ஜிம்மியின் வாலின் நீளத்தின் வர்க்கமூலம் ரெக்சியின் வாலின் நீளத்தின் வர்க்கமூலத்திலும் சிறியது. |
| (4) | ஒரு செங்கோண முக்கோணியின் இரு பக்கங்களின் நீளங்கள் 3, 4 அலகுகளாகும். | மற்றைய பக்கத்தின் நீளம் 5 அலகுகளாகும். |
| (5) | முக்கோணியின் மூன்று உச்சிகளும் சதுரத்தின் ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட பக்கங்களைத் தொடுமாறு ஒரு சதுரத்தின் உள்ளே முக்கோணி உள்வரையப்பட்டுள்ளது. | சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளத்திலும் குறையாத நீளமுள்ள ஒரு பக்கம் முக்கோணியில் உள்ளது. |

● **32** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்கள், ஐந்து நண்பர்கள் தாம் மாத்திரம் பங்குபற்றிய ஓர் ஓட்டப் போட்டி பற்றிய கடந்தகால நினைவுகளை நினைவுகூரும் பின்வரும் கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்டவை.

அம்பகமுவ : நண்பனே நான் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமை நினைவிருக்கின்றதா?

தம்பகமுவ : உனக்கு விசரா? நீ மூன்றாவதாக வந்தாய். நான்தான் முதலாம் இடத்தைப் பெற்றேன்.

நாரங்கமுவ : நண்பனே நீ பிழை விட்டுவிட்டாய். எனது நினைவிலிருப்பது எமது நண்பன் கெசெல்கமுவ தான் முதலாவதாக வந்தான்.

கெசெல்கமுவ : இல்லை நண்பனே. அவ்வாறு நடக்கவில்லை. சொல்வதற்கும் சோகமானதொரு விடயம். நான் தான் கடைசி. ஏனெனில் அன்று எனக்குத் தலைவலி இருந்தது. நாரங்கமுவ, நீ தான் எனக்கு முன்பாக வந்து போட்டியை முடித்தமை எனக்கு ஞாபகம் உள்ளது.

தெல்கமுவ : நல்லது. நான் தான் மூன்றாவதாக வந்தேன். இதுதான் எனக்கு ஞாபகம்.

**32.** கெசெல்கமுவ மூன்றாவதாக வந்திருந்தால், உண்மையைக் கூறுபவர் யார்?
(1) அம்பகமுவ (2) தம்பகமுவ (3) நாரங்கமுவ
(4) கெசெல்கமுவ (5) தெல்கமுவ

**33.** உண்மையைக் கூறுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்தபட்சமாக இருப்பதற்கு இரண்டாம் இடத்தை எவர் பெற்றிருத்தல் வேண்டும்?
(1) அம்பகமுவ (2) தம்பகமுவ (3) நாரங்கமுவ
(4) கெசெல்கமுவ (5) தெல்கமுவ

AptitudeExam.com

34. இருவர் உண்மையைக் கூறுவதாகவும் அம்பகமுவ இறுதியாக வந்தும் இருந்தால், முதலாம் இடத்திற்கு வந்தவர் யார்?
(1) தம்பகமுவ
(2) நாரங்கமுவ
(3) கெசெல்கமுவ
(4) தெல்கமுவ
(5) தீர்மானிப்பதற்குத் தகவல் போதியதன்று.

35. இருவர் உண்மையைக் கூறுவதாகவும் அம்பகமுவவிற்கு முன்னால் வெற்றிக் கோட்டிற்கு அண்மையில் வந்தவர் நாரங்கமுவவாகவும் இருந்தால், இரண்டாம் இடத்தை வென்றவர் யார்?
(1) அம்பகமுவ (2) தம்பகமுவ (3) நாரங்கமுவ
(4) கெசெல்கமுவ (5) தெல்கமுவ

- 36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு கம்பனி தனது ஊழியர்களில் செயற்றிறன் மிக்க ஐந்து ஊழியர்களை புள்ளி அடிப்படையில் தெரிந்தெடுத்துள்ளது. $A, B, C, D, E$ ஆகியோர் ஒன்று முதல் ஐந்து வரையான இடங்களைப் பெற்றிருக்கும் அதே வேளை அவர்களின் இப்பெயர்கள் அவர்கள் பெற்ற இடங்களின் வரிசையில் அமையவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் தாம் செல்ல விரும்பும் ஒவ்வொரு நாட்டைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இதற்காக அவர்களுக்கு ஏற்படும் செலவுகளைக் கம்பனியே தாங்கும். அவர்கள் குறிப்பிட்ட நாடுகள் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜப்பான், ஐக்கிய இராச்சியம் (UK), ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ஆகும். அவர்களுடைய பெயர்களின் அல்லது அவர்கள் பெற்ற இடங்களின் வரிசையில் இந்நாடுகளின் பெயர்கள் அமையவில்லை. மேலும், பின்வரும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

* *B* மாத்திரம் *D* இலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளார்.
* *C* ஆனவர் அவுஸ்திரேலியாவிற்குச் செல்ல விரும்பும் ஊழியரிலும் கூடுதலாகவும் ஜப்பானிற்குச் செல்ல விரும்பும் ஊழியரிலும் குறைவாகவும் புள்ளிகளைப் பெற்றுள்ளார்.
* முதலாம் இடத்தில் இருப்பவர் UK இற்குச் செல்ல விரும்பும் அதே வேளை மூன்றாம் இடத்தில் இருப்பவர் ஜப்பானிற்குச் செல்ல விரும்புகின்றார்.
* *C* செல்ல விரும்பும் நாடு USA அன்று.
* *E* செல்ல விரும்பும் நாடு அவுஸ்திரேலியா அன்று.

36. ஐந்து ஊழியர்களிடையேயும் முதலாம் இடத்தை வென்றவர் யார்?
(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*

37. ஐந்து ஊழியர்களிடையேயும் ஐந்தாம் இடத்தை வென்றவர் யார்?
(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*

38. *D* செல்ல விரும்பும் நாடு எது?
(1) அவுஸ்திரேலியா (2) பிரான்ஸ் (3) ஜப்பான்
(4) UK (5) USA

AptitudeExam.com

- **39, 40** ஆகிய வினாக்களுக்குத் தரப்பட்ட கூற்றை நலிவடையச் செய்யும் வலிமைமிக்க சான்றைத் (உண்மையெனின்) தெரிந்தெடுக்க.

**39.** கூற்று : ஒவ்வோர் ஆண்டும் புதிதாக வெளியிடப்படும் புத்தகங்கள் கிடைக்குமெனின், பிரதேசத்தில் வயதுவந்தவர்களின் எழுத்தறிவை விருத்தி செய்யும் ஒரு பொது நூலகம் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ளது.
(1) முல்லேகமவில் உள்ள எல்லாப் பொது நூலகங்களுக்கும் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை புதிய புத்தகங்கள் கிடைக்கின்ற போதிலும் கடந்த ஏழு ஆண்டுகளில் பிரதேசத்திலுள்ள வயதுவந்தவர்களின் எழுத்தறிவு வீதம் 6% இனால் விழ்ச்சியடைந்துள்ளது.
(2) கடந்த ஐந்து ஆண்டுகளில் பத்தலன்குண்டுப் பிரதேசப் பொது நூலகத்திற்குப் புதிய புத்தகம் எதுவும் கிடைக்காத போதிலும் கடந்த ஆண்டு அப்பிரதேசத்தின் வயதுவந்தோரின் எழுத்தறிவு வீதம் 10% இனால் அதிகரித்துள்ளது.
(3) மடொல் தூவவில் உள்ள ஒரு பொது நூலகத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் புதிய புத்தகங்கள் கிடைக்கின்ற போதிலும் கடந்த பத்தாண்டுகளில் வயதுவந்தோரின் எழுத்தறிவு வீதம் 5% இனால் விழ்ச்சியடைந்துள்ளது.
(4) வடமேற்கு மாகாணத்தில் பல புதிய பொது நூலகங்கள் திறக்கப்பட்ட அதே வேளை கடந்த ஆண்டில் வயது வந்தோரின் எழுத்தறிவு வீதம் 6% இனால் அதிகரித்துள்ளது.
(5) நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் குறைந்தபட்சம் ஒரு பொது நூலகமேனும் இருக்கின்ற போதிலும் நாட்டின் வயது வந்தோரின் எழுத்தறிவு வீதம் குறைந்துகொண்டு வருகின்றது.

**40.** கூற்று : வட மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மழை வீழ்ச்சி உள்ள ஒரு மாதம் இருக்கும் அதே வேளை அம்மாதத்தில் அம்மாகாணத்தில் காய்கறி உற்பத்தியும் அதிகரித்துள்ளது.
(1) இவ்வாண்டு முழுவதும் பொலன்னறுவையில் மழை இல்லாத போதிலும் அங்கு காய்கறி உற்பத்தி கடந்த ஆண்டிலும் பார்க்க நன்றாக இருந்தது.
(2) மே மாதத்தில் அநுராதபுரத்திற்கு அல்லது பொலன்னறுவைக்கு அதிக மழை கிடைக்காத போதிலும் செப்ரெம்பர் மாதத்தில் காய்கறி உற்பத்தி மிகவும் உயர்வாக இருந்தது.
(3) முழு ஆண்டின் போதும் அநுராதபுரத்திற்குக் குறைவான மழைவீழ்ச்சி கிடைத்த போதிலும் அங்கு காய்கறி உற்பத்தி கடந்த ஆண்டிலும் பார்க்க நன்றாக இருந்தது.
(4) ஜனவரி, செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய மாதங்களில் பொலன்னறுவையில் வெள்ளம் இருந்த அதே வேளை அது அம்மாவட்டத்தில் காய்கறி உற்பத்தியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியது.
(5) சிறுபோகத்தில் மழை குறைவாக இருந்தமையால் அநுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் சில வயற் காணிகள் சட்டவிரோதமாகக் காய்கறித் தோட்டங்களாக மாற்றப்பட்டன.

- **41, 42** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு கம்பனியில் தொழில்களுக்காக விண்ணப்பித்துள்ள ஐந்து விண்ணப்பதாரிகள் பற்றிய தகவல்களின் பொழிப்பு பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் அதியுயர் கல்வித் தகைமை க.பொ.த. உயர் தரமாகும். அவர்களது பெறுபேறுகளும் வயதுகளும் ஆட்சேர்ப்பின்போது கருதிப் பார்க்கப்படுகின்றன.

| விண்ணப்பதாரியின் பெயர் | பிறந்த திகதி | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மூன்று பிரதான பாடங்களிலும் பெற்ற தரங்கள் | | | சாதாரண ஆங்கிலத்தின் தரம் | பொதுச் சாதாரணப் பரீட்சை (CGT) இல் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| | | பாடம் 1 | பாடம் 2 | பாடம் 3 | | |
| *P* | 2002.01.01 | A | A | B | B | 68 |
| *Q* | 2001.01.01 | B | C | A | A | 72 |
| *R* | 2001.10.01 | B | C | C | A | 80 |
| *S* | 2000.08.20 | A | B | A | B | 70 |
| *T* | 2002.05.31 | B | A | A | B | 70 |

க.பொ.த. (உ.த.) பாடங்களுக்கான புள்ளி வழங்கும் திட்டம் பின்வருமாறு.

மூன்று பிரதான பாடங்களுக்கும் சாதாரண ஆங்கிலத்திற்கும் தரம் A = 80 புள்ளிகள், தரம் B = 70 புள்ளிகள், தரம் C = 60 புள்ளிகள், தரம் S = 50 புள்ளிகள்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் இறுதிப் புள்ளிகள் நான்கு பாடங்களினதும் தாங்களுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையுடன் CGT புள்ளிகளைக் கூட்டுவதன் மூலம் கணிக்கப்படுகின்றது.

**41.** 2023 யூலை 1 ஆந் திகதியில் 22 வயதிற்குக் கீழ்ப்பட்ட விண்ணப்பதாரிகளிடையே உயர்ந்தபட்ச புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரி யார்?
(1) *P* (2) *Q* (3) *R* (4) *S* (5) *T*


**42.** "ஒரு குழுவின் ஓர் உறுப்பினரின் வகுதி" என்பது குழுவின் எல்லா உறுப்பினர்களையும் ஒவ்வொரு உறுப்பினரினதும் மொத்தப் புள்ளிகளின் இறங்குவரிசைக்கேற்ப ஒழுங்குபடுத்தும்போது அவர்களுக்குரிய தானமாகும். அதன்படி *P* இன் வகுதி யாது?
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

AptitudeExam.com

- **43, 44** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

உருவில் *ABCD*, *BEFG*, *EHIJ*, *HAKL* ஆகிய செவ்வகங்கள் ஒரு குறித்த பாடசாலையின் உயர்தர வகுப்புகளில் முறையே பௌதிகவியல், உயிரியல், விவசாயம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கைகளைக் காட்டுகின்றன. மேற்குறித்த நான்கு பாடங்களில் எவையேனும் இரண்டு பாடங்களைக் கற்கும் ஒவ்வொரு மாணவனும் இரசாயனவியலையும் கற்கின்றான்.

இப்பாடசாலையின் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் உள்ள எல்லா மாணவர்களும் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசானவியல் ஆகிய மூன்று பாடங்களையும் கற்கின்றனர்.




**43.** இப்பாடசாலையில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்?
(1) 10 (2) 100 (3) 120 (4) 200 (5) 220

**44.** இப்பாடசாலையில் குறைந்தபட்சம் எத்தனை மாணவர்கள் இரசாயனவியலைக் கற்கின்றனர்?
(1) 250 (2) 260 (3) 270 (4) 280 (5) 290

**45.** இவ்வினாவில் 1, 7 ஆகியவற்றினால் குறிக்கப்படும் இரு வாக்கியங்களுக்கு இடையே உள்ள *A*, *B*, *C*, *D*, *E* ஆகிய வாக்கியங்கள் சரியான ஒழுங்குவரிசையில் இருக்கவில்லை. ஏழு வாக்கியங்களினதும் ஒரு தருக்க ரீதியான தொடரியை அமைப்பதற்கான அவற்றின் சரியான ஒழுங்குமுறையைத் தெரிந்தெடுக்க.

1 - இலங்கையில் தென்னை நடுகை வழக்கமாக ஒவ்வோர் ஆண்டும் செப்ரெம்பர் / ஒக்ரோபர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரைக்கும் பெரும் போகத்தில் மழைவீழ்ச்சி ஆரம்பமாவதுடன் நடைபெறுகின்றது.

*A* - தென்னம் நாற்றுமேடைகளில் வித்து முளைத்தல் ஆரம்பமாகும்போது ஒவ்வோர் ஆண்டும் மழைகாலத்திற்கு முன்பாக தென்னைச் செய்கைக்காக நிலங்களைப் பண்படுத்தும் செயற்பாடுகள் தொடங்குகின்றன.

*B* - ஒரு கண்ணினூடாக (துளை) மேல்நோக்கி கன்றுகளின் தளிர்கள் உண்டாகி தேங்காய் மட்டையினூடாக வெளியே வரக் காணப்படும்.

*C* - ஓகஸ்ட் / செம்ரெம்பர் மாதங்களில் ஆரோக்கியமான வித்துக்களிலிருந்து 5 அல்லது 6 ஓலைகள் உண்டாகும் அதே வேளை அவை மீண்டும் பெயர்த்து நடுவதற்கு உகந்தன.

*D* - தேங்காய்கள் நாற்றுமேடைகளில் இடப்பட்டு, குறித்த இடைவேளைகளில் நீர் வழங்கப்படும்.

*E* - ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இனங்காணப்பட்ட தாய்த் தாவரங்களிலிருந்து தேங்காய்கள் சேகரிக்கப்பட்டு நாற்றுமேடைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

7 - வாடிக்கையாளர்கள் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையுள்ள காலங்களின்போது பெயர்த்து நடுவதற்கு பொதி செய்யப்படாத அல்லது பொலித்தீனில் பொதிசெய்த நாற்றுகளை தென்னம் நாற்றுமேடைகளில் வாங்கலாம்.

(1) *A*, *D*, *E*, *B*, *C* (2) *A*, *D*, *E*, *C*, *B* (3) *A*, *E*, *D*, *B*, *C*
(4) *B*, *C*, *D*, *E*, *A* (5) *D*, *B*, *C*, *A*, *E*

AptitudeExam.com

**46.** பின்வரும் *A, B, C, D, E* என்னும் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் மூன்று கூற்றுக்கள் உள்ளன. இப்பிரிவுகளில் எது கருத்துள்ள தொடரியில் மீள ஒழுங்குபடுத்தப்படத்தக்க கூற்றுகளைக் கொண்டுள்ளது?

*A* (*a*) ராசு கடிதத்தைப் பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்காக அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்றான்.
(*b*) ராசு இழந்த க.பொ.த. (சா.த.) சான்றிதழின் ஓர் உறுதிப்படுத்திய பிரதியைப் பெறுவதற்காகப் பரீட்சைத் திணைக்களத்திற்கு ஒரு கடிதம் எழுதினான்.
(*c*) பதிவுத் தபாலுக்கான முத்திரைக் கட்டணம் ரூ. 110.00 ஆகும்.

*B* (*a*) இலங்கையின் மேட்டு நிலங்களில் மிளகாய்ச் செடிகளும் வெங்காயமும் வளர்க்கப்படுகின்றன.
(*b*) சமைத்த உணவை நற்காப்புச் செய்யும் ஒரு நடவடிக்கையாக மிகையான வாசனைச் சரக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.
(*c*) வன்னியில் வதியும் அனுஷிக்கா தனது பகற்போசன வேளையிலும் இராப்போசன வேளையிலும் தனது உணவுடன் மிளகாய், வெங்காயம், உள்ளி ஆகியவற்றை உண்ணும் வழக்கத்தைக் கொண்டுள்ளாள்.


*C* (*a*) மாமரத்தைப் பரிசோதித்த கத்தரிப்பாளர் மாமரம் இப்போகத்திற்காக பூக்க ஆரம்பித்து விட்டதெனவும் பூத்தலும் கனி கொள்ளலும் முடியும் வரைக்கும் காத்திருக்க வேண்டும் எனவும் கூறினார்.
(*b*) ரொஷான் மரக் கத்தரிப்பாளர் ஒருவரைச் சந்தித்தார்.
(*c*) மாமரத்தின் பலன்தருதிறனை அதிகரிக்கச் செய்வதற்கு மர விதானத்தினுள்ளே ஊடுருவும் சூரியவொளியை அதிகரிக்கச் செய்வதற்காக ரொஷான் தனது மாமரத்தைக் கத்தரிக்க விரும்பினான்.

*D* (*a*) இலங்கை மின்சார சபையின் மானி வாசிப்பாளர் ஒவ்வொரு மாதமும் ஒரு குறித்த நாளில் ஒவ்வொரு வீட்டிற்கும் வருகிறார்.
(*b*) மானி வாசிப்பாளர் மின்சாரக் கணக்குக் கூற்றில் (SEA) தான் வந்த திகதியையும் தற்போதைய மானி வாசிப்பையும் குறிப்பிடுகின்றார்.
(*c*) மின்சாரக் கணக்குக் கூற்றில் அவர் முந்திய மாதத்தில் வந்த திகதி, முந்திய மானி வாசிப்பு, இம்மாதத்திற்கான ரூபாயிலான கட்டணம் ஆகியன இடம்பெறுகின்றன.


*E* (*a*) இலங்கை அரசாங்கம் 2023 செப்ரெம்பரில் வடமாகாணத்தில் ஒரு புதிய தென்னை முக்கோணிச் செயற்றிட்டத்தை ஆரம்பித்தது.
(*b*) ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னர் புத்தளம், குருணாகல், கொழும்பு ஆகியவற்றுக்கிடையே முதலாவது தென்னை முக்கோணிச் செயற்றிட்டம் தாபிக்கப்பட்டது.
(*c*) தென்னை முக்கோணிச் செயற்றிட்டம் தென்னைச் செய்கையை மாத்திரமல்ல தென்னையுடன் தொடர்புபட்ட கைத்தொழில்களையும் மேம்படுத்துகின்றது.

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*


**47.** பின்வரும் சித்திரங்களின் மூலம் விவரிக்கப்படும் சம்பவத்தைக் கருதுக.




*A*




*B*




*C*



*D*



*E*



*F*

மேற்படி படங்களின் பின்வரும் எந்த வரிசைப்படுத்தல் அச்சம்பவத்தின் சரியான படிமுறை ஒழுங்கைக் காட்டுகின்றது?

(1) *D, A, C, E, B, F*
(2) *A, C, D, E, B, F*
(3) *A, D, F, B, E, F*
(4) *A, D, C, E, B, F*
(5) *D, C, E, A, B, F*

AptitudeExam.com

- **48** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ராஜா, அவருடைய மனைவி மாலா, பிறந்த தினத்தைக் கொண்டாடும் ஷாமா ஆகியோர் உட்பட அவர்கள் பிள்ளைகளுக்கும் பிறந்ததின விழாவுக்கு வந்தவர்களுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்டவை.

அவர்கள் பிறந்ததின விழாவிற்காக ஜோன் மாமா (மாலாவின் ஒரு சகோதரர்), அவருடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆகியோரை மாத்திரம் அழைத்திருந்தனர். ராஜா, மாலா, ஜோன் மாமா, வந்திருந்த பிள்ளைகள் ஆகியோருக்கிடையே விழாவிற்கு முன்பாகவும் விழாவின் போதும் நடைபெற்ற கலந்துரையாடல் *A* தொடக்கம் *L* வரைக்குமான பகுதிகளைக் கொண்டிருக்கின்ற போதிலும் அவை கலந்துரையாடல் நடைபெற்ற ஒழுங்குமுறைக்கேற்ப முன்வைக்கப்படவில்லை.

*A*. ஷாமா, சின்னத்தம்பி உட்பட ஏனைய எல்லோருக்கும் வணக்கம்.

*B*. ஜோன் மாமா, மாமி உட்பட அனைவருக்கும் வணக்கம்.

*C*. உங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான பிறந்தநாள் ஆகட்டும் ஷாமா. (எல்லோரும் ஷாமாவிற்கு பிறந்ததின வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.)

*D*. ஆம், எனக்குத் தெரியும் மாலா, நாம் எமது சின்னவனின் 9 ஆவது பிறந்ததினக் கொண்டாட்டத்தை மூன்று மாதங்களுக்கு முன்னர் நடத்தினோம். ஆகவே இக்கொண்டாட்டத்தை பின்னேரக் கேக், பணியாரம் ஆகியவற்றுடனும் சில நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருடனும் நடத்துவோம்.

*E*. ராஜா, எமது ஷாமாவின் 12 ஆவது பிறந்தநாள் டிசெம்பர் 16 ஆந் திகதி சனிக்கிழமை வருகின்றது.

*F*. இல்லை மாமா, தாத்தா கொழும்பில் உள்ள பிரசித்தி பெற்ற பேக்கரியில் இப்பேரீச்சம்பழக் கேக்கை வாங்கினார்.

*G*. நல்ல கேக், இனிய சுவை, இதமான நறுமணம் அதனைச் செய்வதற்கு ஒரு விசேட கட்டளையை அளித்தீர்களா?

*H*. உங்களுக்கு நன்றி.

*I*. ஜோன் மாமா, மாமி உட்பட அனைவருக்கும் மிக்க நன்றி. நல்லிரவு.

*J*. எமது திட்டத்துடன் ஷாமா இணங்குகின்றார். எனினும் சில நண்பர்களை அழைக்க வேண்டும்.

*K*. நானும் மாலாவுடன் இணங்குகின்றேன். நீங்கள் தயவுசெய்து இதனைச் ஷாமாவிற்குச் சொல்லுங்கள்.

*I*. நாங்கள் இத்தடவை நல்ல தரமான 'பெயர் பிராண்ட்' பேரீச்சம்பழக் கேக்கை வாங்குவோம். ஜோன் மாமாவின் குடும்பத்தை அழைக்க வேண்டும்.

**48.** பின்வரும் விருப்பத்தெரிவுகளில் எது ராஜாவிற்கும் அவருடைய மனைவிக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலைத் தருகின்றது?

(1) *E, D, J, L, K* (2) *E, D, K, J, L* (3) *E, D, L, K, J*
(4) *K, J, E, D, L* (5) *L, K, E, D, J*

**49.** பின்வரும் விருப்பத்தெரிவுகளில் எது ஜோன் மாமாவிற்கும் ஷாமாவிற்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலைத் தருகின்றது?

(1) *A, B, G, F, H* (2) *A, B, H, G, F* (3) *B, A, G, F, H*
(4) *G, F, A, B, H* (5) *G, F, H, A, B*

**50.** பின்வரும் விருப்பத்தெரிவுகளில் எது முழுக் கலந்துரையாடலினதும் உண்மையான ஒழுங்குமுறையைத் தருகின்றது?

(1) *E, D, J, K, L, C, G, F, H, A, B*
(2) *E, D, J, L, K, C, A, B, H, F, G*
(3) *E, D, J, L, K, C, G, F, A, B, H*
(4) *E, D, L, K, J, A, C, B, G, F, H*
(5) *K, J, E, D, L, C, G, F, A, B, H*

***

AptitudeExam.com